(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலிருந்து கும்பகோணத்திற்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து கும்பகோணத்திற்கு நேரடி பயணிகள் உபயோகம் குறைவாக இருக்கும் என்பதால், தனிப்பேருந்து இயக்கும் அளவிற்கு போக்குவரத்து தேவை எழவில்லை.

244—

பேருந்து வசதி

வினா எண் 4334—திரு. ஏ.கே. பாபு முருகவேல்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலிருந்து திருச்சிக்கு புதிய வழித்தடம் மூலம் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து திருச்சிக்கு நேரடி பயணிகள் உபயோகம் குறைவாக இருக்கும் என்பதால், தனிப்பேருந்து இயக்கும் அளவிற்கு போக்குவரத்துத் தேவை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

245—

பேருந்து வசதி

வினா எண் 4335—திரு. ஏ.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூந்தமல்லியிலிருந்து கிண்டி வழியாக அண்ணா சாலைக்கு இரவு நேரத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பிராட்வேயிலிருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் இரவு நேரப் பேருந்துகளை பயன்படுத்தி சைதாப்பேட்டையில் மாறி, தடம் எண் எம்-54 இரவு நேர பேருந்துகளையும் கிண்டி-மவுண்ட் சாலை வழியாக பூந்தமல்லி சென்று அடைவதற்கு வசதியாக இரவுநேர பேருந்து இயக்கப்படுகிறது.

246—

பணிமனை அமைத்தல்

வினா எண் 5683—திரு. பி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதியில் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-தென்காசி பிரதான சாலையிலுள்ள ஆலங்குளத்திலிருந்து 25 கி.மீ. தூரத்திலுள்ள தென்காசியில் ஒரு பணிமனையும், 37 கி.மீ. தூரத்திலுள்ள திருநெல்வேலியில் மூன்று பணிமனைகளும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்,

திருநெல்வேலி கோட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. தவிரவும் அரசு ஆணை எண் 61, நாள் 9-9-1992-இன்படி, இரு பணிமனைகளுக்கிடையே குறைந்தபட்சம் 40 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். தற்போதுள்ள பணிமனைகளுக்கிடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளதால், மேலும் ஒரு புதிய பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

247—

பணிமனை அமைத்தல்

வினா எண் 6185—திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட், கும்பகோணம், தஞ்சாவூர், அரியலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கிளைகளிலிருந்து பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்பட்டு, திருக்காட்டுப்பள்ளியில் வாழும் மக்கள் அனைவருக்கும் பேருந்து வசதிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனவே, திருக்காட்டுப்பள்ளியில் புதிய பணிமனை அமைத்திடத் தேவையில்லை.

248—

பணிமனை அமைத்தல்

வினா எண் 6769—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—